ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2376/21 - 2024 මාර්තු මස 20 වැනි බදාදා - 2024.03.20

2376/21 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/AKU/4/2/1/104.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2020/WS/194.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 590 கொண்ட ரம்புக்கே எல கிராம அலுவலர் பிரிவில் ரம்புக்கே எல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட, 2023.08.28 ஆந் திகதிய இல. கா.சி. 320677 கொண்ட அடிப்படை வரைபடத்தில் காணித் துண்டு இல. 01, 02 எனக் காட்டப்பட்டுள்ள 0.0288 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய தெஹிகஹ மடவத்த எனும் காணியின் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் :

**01. துண்டு இல. 01 - காணியின் பெயர் : தெஹிகஹ மடவத்த; உரிமை கோருபவர் : மொஹமட் இப்ராஹீம் ரம்சான், இல. 193, ரம்புக்கே எல, விலானகம; விஸ்தீரணம் : 0.0123 ஹெக்டயார். (4.9 பேர்ச்)**

வடக்கு : பாதை மற்றும் நீரோடை; கிழக்கு : நீரோடை மற்றும் காணித்துண்டு இல. 02; தெற்கு : ஜுனைதீன் பவ்சுல் ஹானியா உரிமை கோரும் தெஹிகஹமடவத்த; மேற்கு : பாதை.

**02. துண்டு இல. 02 - காணியின் பெயர் : தெஹிகஹ மடவத்த; உரிமை கோருபவர் : ஜுனைதீன் பவ்சுல் ஹானியா, இல. 199, ரம்புக்கே எல, விலானகம; விஸ்தீரணம் : 0.0165 ஹெக்டயார். (6.5 பேர்ச்)**

வடக்கு : காணித்துண்டு இல. 01 மற்றும் நீரோடை; கிழக்கு : நீரோடை மற்றும் பாதை; தெற்கு : பாதை



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மற்றும் ஜுனைதீன் பவ்சுல் ஹானியா உரிமை கோரும் தெஹிகஹமடவத்த; மேற்கு : காணித் துண்டு இல. 01.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அக்குரணை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமை கோரல் தொடர்பில் காணி உறுதிகள் ஆகியனவற்றை பரிசீலனைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

டீ.ஆர்.கே. ஹென்னாயக,
பிரதேச செயலாளர்,
அக்குரணை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அக்குரணை,
2024, மாச்சு 19.

EOG 03 - 0161